# 19 சக வாழ்வு வாழ்வோம்

கொரிந்தியருக்கும் எபேசியருக்கும் எழுதப்பட்ட திருமுகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இறையரசின் சிறப்பான பெறுமதிகளை முன்னுதாரணமாகக் கொண்டு சக வாழ்வை வலுப்படுத்த பங்களிப்பு வழங்குதல் இப்பாடத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**திருவிவிலியம்: எபேசியர் 4:11-16, 2 கொரிந்தியர் 6:4-7, 14-16, 7:1**

இவ் உலகில் இயேசுவின் சார்பில் செயற்பாடுகளை நிறைவேற்ற, இறைவன் கிறிஸ்தவராகிய எம்மை அழைத்துள்ளார். அதற்காக இயேசு பயணம் செய்த கடினமான வழியில் நாமும் பயணம் செய்ய நேரிடலாம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறான பாதையில் பயணம் செய்கையில், எமது மனப்பாங்கும் கருத்துக்களும் சமூகத்தில் நிலவும் மனப்பாங்குகள் கருத்துக்களுடன் பொருந்தாத தன்மை ஏற்படலாம்.

***மாறாக அனைத்துச் சூழ்நிலைகளிலும் நாங்கள் கடவுளின் பணியாளர்கள் என்பதை எங்கள் நடத்தையால் காட்டுகிறோம்.***
***வேதனை, இடர், நெருக்கடி ஆகியவற்றை மிகுந்த மன உறுதியோடு தாங்கி வருகிறோம்.***
***நாங்கள் அடிக்கப்பட்டோம். சிறையில் அடைக்கப்பட்டோம். குழப்பங்களில் சிக்கினோம். பாடுபட்டு உழைத்தோம். கண் விழித்திருந்தோம். பட்டினி கிடந்தோம்.***
***தூய்மை, அறிவு, பொறுமை, நன்மை, தூய ஆவியின் கொடைகள், வெளிவேடமற்ற அன்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றோம்.***

2 **கொரிந்தியர்** 6:4-5

இப்பயணத்தை மேற்கொள்ளும் எமக்குப் பல்வேறு அருட்கொடைகள் வழங் கப்பட்டுள்ளன. (எபேசியர் 4:11) அவை திருஅவையின் பல பணிகளுக்குப் பயன்படுத் தலாம். மேலும் இறையரசின் பண்புகள் வெளிப்படும் கிறிஸ்தவ பிரஜையாகவும் திருஅவையாகவும் நாம் சமூகத்துடன் தொடர்புபட்டுள்ளோம். இறைவன் எமக்கு ஆற்றல்களை எமது சொந்த நோக்கத்தை நிறைவேற்றத் தரவில்லை என்பதை நாம் இங்கு அறிந்துகொள்ள வேண்டும். அவை கிறிஸ்துவின் உடலுடன் இணைந்து இறை விருப்பம் நிறைவேறச் செயற்பட வேண்டும். இதனூடாக நாம் கிறிஸ்துவின் உடலை வளர்ப்போம். (எபேசியர் 4:16)

## சகவாழ்வில் எதிர்நோக்கும் சவால்கள்

### வாசித்துப் பார்ப்போம்

**2 கொரிந்தியர் 6:16, 7:1**

நாம் வாழும் சமூகம் கிறிஸ்தவர்கள் மாத்திரம் காணப்படும் சமூகம் அல்ல என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறான சூழலில் கிறிஸ்தவராகிய நாம் அவதானத்துடன் வாழவேண்டும். எமது செயல்களில் பிறரை ஒதுக்கி, அவர்களின், கருத்துக்களை மறுத்து, அவர்களின் எண்ணங்களை மதிக்காது வாழும் சுற்றாடலை உருவாக்காதிருத்தல் அவசியம்.

**கலப்பு சமூகத்தின் சிறந்த குணவியல்புகள்**

1. கலப்பு திருமணத்தால் உருவாகும் குடும்பங்களை ஆதரித்தல்

2. சமூகப் பணியில் கிறிஸ்தவர், கிறிஸ்தவர் அல்லாதவர் ஒன்றிணைந்து செயற்படுதல். (மரண உதவிச் சங்கம், நலன்புரிச் சங்கம்)

3. சமூக அநீதிகளுக்கு எதிராகச் செயற்படும் அமைப்புக்களில் அங்கம் வகித்தல். (தொழில் நிறுவனங்கள்)

4. பிற சமயங்களுக்கு இடையிலான சந்திப்புக்களில் பங்குபற்றல், அவர்களுக்கு உதவி செய்தல் (திருமணம், மரணம்)

5. பிற மதத்தவரின் விசேட அழைப்புக்களை மதித்து நடத்தல் (கலாசார விழாக்கள், சமய விழாக்கள்)

பவுல் முன்வைத்த கருத்துக்கள் சிலவற்றையும் நாம் இங்கு பார்ப்போம்.

1. வாழும் கடவுளின் கோவில் நாமே
   (2 கொரிந்தியர் 6:16)

2. நாம் உடலிலும் உள்ளத்திலும் மாசு எதுவுமின்றி நம்மையே தூய்மைப் படுத்துவோம்.
   (2 கொரிந்தியர் 7:1)

3. கடவுளுக்கு அஞ்சி தூய வாழ்வில் நிறைவடைவோம். (2 கொரிந்தியர் 7:1)

பவுல் முன்வைக்கும் இக்கருத்துக்களைப் பற்றி நாம் சிந்திப்போம். பல்லின, பல்சமய சமூகத்தில் வாழும் நாம் அனைத்திலும் இணக்கம் தெரிவிக்க முடியாது.

அனைத்து மத நம்பிக்கைகளிலும் சமத்துவத்தை காணமுடியாது.

நாம் நம்புகின்றவற்றை பிறர் ஏற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்கள் காணப்படும்.

எமது ஆன்மீக அறிவை செயற்படுத்தும்போது சில வேளைகளில் எமது கருத்துக்கள் முரண்பாடுடையவையாகத் தென்படலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது நம்பிக்கையைப் பாதுகாத்து செயற்படும் பொறுப்பு எமக்கு உண்டு. இறையரசின் பண்புகள் மற்றும் இறையரசின் பெறுமதி என்பவற்றை எமது வாழ்வின் மூலம் சமூகத்தில் வெளிப்படுத்தும் பொறுப்பு எமக்கு உண்டு. அவ்வாறான செயலில் ஈடுபடும் வேளையில் எப்போதும் முள் நிறைந்த அனுபவங்களைப் பெறும் சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். அவ்வாறான வேளைகளில் சமூகத்தில் சகவாழ்வு நிமித்தம் எம்மால் ஆற்றப்படவேண்டிய நற்செயல்களை நாம் ஆற்ற வேண்டும்.

உதாரணமாக, சமூகத்தில் பிள்ளை உலகு தொடர்பான பொறுப்பில் செயற்படும் போது, புனித தெரேசாவை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்படும் வாய்ப்பு எமக்கு உண்டு. அவர் இறையரசின் உத்தம பண்பான இறையன்பை பலவித வேறுபாடுகளையும் கடந்து சமூகத்தில், சகவாழ்வில் இணைந்து முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். நாமும் இவ்வாறு சகவாழ்வு வாழ முயற்சிப்போம்.

**நாம் நற்பண்புகளை வளர்த்து நல்லுறவுடன் சமூகத்தில் சக வாழ்வு வாழ்வோம்.**

**செயற்பாடு**

01. உங்களில் காணப்படும் கடவுள் அருளிய கொடைகள் மூன்றை அடையாளம் கண்டு இறை மகிமைக்காக அவற்றைப் பயன்படுத்தும் வழிகளை எழுதுக.

02. ''சக வாழ்வு வாழ்வோம்'' என்ற தலைப்பில் கிறிஸ்தவ சஞ்சிகைக்கு கட்டுரையொன்று எழுதுக.